Registered as a Newspaper

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 291

வியாழக்கிழமை
12 செப்ரெம்பர் 2024

ஆவணி 27 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"கடைசியா எல்லாக் கப்பலும் கவிண்டு போனால் உப்பிடி தாவிறவை என்ன செய்வினம்?"

# பொருளாதாரக் கொள்கை அநுரவிடம் இல்லை!

## தெளிவுபடுத்தவேண்டும் என ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



**கொழும்பு, செப்ரெம்பர் 12**

**அநுரகுமார தரப்பினரின் (திசைகாட்டியின்) பொருளாதாரக் கொள்கை ஏற்றுமதிப் பொருளாதாரமா? இறக்குமதிப் பொருளாதாரமா? என்ற கேள்விக்கு இன்னமும் பதில் வழங்க முடியாத அநுர, என்னை விவாதத்துக்கு அழைக்கின்றார் என்று ஜனாதிபதி ரணில் தெரிவித்துள்ளார்.**

☞ 11

# யாழ்ப்பாணத்துக்கு வருகின்றார் நாமல்



கொழும்பு, செப். 12

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளரான நாமல் ராஜபக்ச, இன்று யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பல்வேறுபட்ட தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் நாமல் ராஜபக்ச இன்று பங்குபற்றவுள்ளார்.

13 ஆவது திருத்தத்தை நிறைவேற்ற இடமளிக்கப்போவதில்லை என்றும், நாட்டின் ஒற்றையாட்சித் தன்மை உறுதிப்படுத்தப்படும் எனவும் தெற்கில் வைத்து நாமல் ராஜபக்ச தொடர்ச்சியாகத் தெரிவித்துவரும் நிலையில், அவரின் வடக்குப் பயணம் பல்வேறுபட்ட எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தியுள்ளது. (அ-ம-26)

# ரணிலுக்கான ஆதரவு மக்களிடம் அதிகரிப்பு

## ராஜித சேனாரத்ன தெரிவிப்பு

கொழும்பு, செப். 12

வீடுவீடாக மேற்கொண்ட பரப்புரைகளைத் தொடர்ந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கான மக்கள் ஆதரவு அதிகரிக்க ஆரம்பித்துள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

☞ 11

# தேர்தல் முறைப்பாடு 3,500

கொழும்பு, செப். 12

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இதுவரை 3 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப்

☞ 11

### உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவால்

# படையினரைத் தண்டிக்கும் நோக்கம் எமக்கு இல்லை!

## அநுரவின் தரப்புப் பிரதானியான நளிந்த ஜயதிஸ்ஸ வலியுறுத்து

கொழும்பு, செப். 12

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவென்பது இராணுவத்தினரை பலிக்கடாவாக்குவதற்கான பொறிமுறை அல்ல எனத் தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

☞ 11

# ரணிலின் அரசாங்கம் கவிழப்போகும் கப்பல்

## சஜித் பக்கம் தாவிய கீதா எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, செப். 12

கவிழப்போகும் கப்பலில் ஏறித் தற்கொலை செய்து கொள்ள நான் விரும்பவில்லை. சரியான பாதையில் பயணிப்பதற்காக எந்தவொரு தியாகத்துக்கும் நான் தயாராகவே இருக்கின்றேன் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

☞ 11

### லசந்த, வஸிம் தாஜுதீன்

# கொலையாளிகள் சுதந்திர நடமாட்டம்

## சி.ஐ.டி. முன்னாள் பணிப்பாளர் ரவி செனிவிரத்ன ஆதங்கம்

விரிவு :- பக். 05

# தபால் வாக்களிப்பு இன்றுடன் நிறைவு!

கொழும்பு, செப். 12

ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்புக்காக மேலதிகமாக வழங்கப்பட்ட அவகாசம் இன்றுடன் நிறைவடையவுள்ள நிலையில், மேலும் காலநீடிப்பு வழங்கப்படாது என்று தேர்தல்கள் ஆணைக்குழு திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

☞ 11

# எவரிடமும் தீர்வில்லை

## பேராசிரியர் அத்துக்கோரள தெரிவிப்பு

விரிவு :- பக். 02

# போர்க்குற்ற மிரட்டல்களால்தான் அரகலயவில் கைவைக்கவில்லை!

## பாதுகாப்புத் தரப்பினர் மீது ஜயந்த சமரவீர குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 12

இலங்கையில் தமிழ்ச் செல்வன் இருந்த இடத்தை இலக்கு வைத்து குண்டுபோட்ட எமது புலனாய்வுப் பிரிவுக்கு, காலியில் இருந்து கொழும்புக்கு பெருந்திரளான மக்கள் வருவது தெரியாதா? இராணுவ பிரதானிகளுக்கு இது தெரியாதா? போர்க்குற்றச்சாட்டுப் பட்டியலில் அவர்கள் உள்ளனர். அதை வைத்துதான் அமெரிக்கத் தூதுவர் அவர்களை அச்சுறுத்தியுள்ளார் என நாடாளு

☞ 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்த வேட்பாளரிடமும் நாட்டுக்கான தீர்வில்லை!

## பேராசிரியர் வசந்த அத்துக்கோரள தெரிவிப்பு

கொழும்பு, செப்.12

**நாடு எதிர்நோக்கி வரும் பொருளாதாரப் பிரச்சினைக்கு எந்த ஒரு ஜனாதிபதி வேட்பாளரிடமும் தீர்வு இல்லை. நாட்டின் பொருளாதாரத்தை கட்டி எழுப்பக்கூடிய வகையிலான கொள்கைகளை எந்த ஒரு ஜனாதிபதி வேட்பாளரும் சமர்ப்பிக்கவில்லை.**

-இவ்வாறு பேராதனைப் பல்கலைக் கழகத்தின் பொருளியல் விஞ்ஞான மற்றும் புள்ளிவிவரவியல் கற்கை பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துக்கோரள சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வேட்பாளர்களின் கொள்கைப் பிரகடனங்களில் பொருளாதார சமூக மற்றும் அரசியல் கட்டமைப்பு தொடர்பிலான பல்வேறு விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் 5 ஆண்டு காலத்தில் நாட்டில் நிலவக்கூடிய பொருளாதார நெருக்கடி நிலைமைகளை வெற்றி கொள்வதற்கான வழிமுறைகளை எந்த ஒரு வேட்பாளரும் முன்வைக்கவில்லை. மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் வகையில் அரசியல் கட்சிகளினால் முன்மொழியப்பட்டுள்ள யோசனைகள் எந்த வகையிலும் ஏற்புடையதல்ல. நாட்டின் பொருளாதார வளர்ச்சி வேகத்தை 10 வீதமாக அதிகரிக்க வேண்டியது மிகவும் அவசியமானது - என்றார். (ச-இ)



# 10 வருடங்களில் பலர் பணக்காரர்

## ரணில் தெரிவிப்பு

கொழும்பு, செப்.12

நீங்கள் துன்பப்படும்போது யாரும் முன்வரவில்லை. எனது முயற்சிகளுக்கு ஒத்துழைக்க முன்வருமாறும், அரசாங்கத்துடன் இணையுமாறும் நான் கேட்கிறேன். 10 வருடத்துக்குப் பின்னர் பலர் பணக்காரராக இருப்பீர்கள்.

-இவ்வாறு கிளிநொச்சியில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்த சந்தர்ப்பத்தில் நாட்டை நான் பொறுப்பெடுத்தேன். அதிலிருந்து மீட்க முனைந்தேன். நாட்டை மீட்டேன். அநுர, சஜித் யாரும் நாட்டை மீட்க முன்வரவில்லை.

எனது முயற்சிகளுக்கு ஒத்துழைக்க முன்வருமாறும், அரசாங்கத்துடன் இணையுமாறும் நான் கேட்டேன். அவர்கள் முன்வரவில்லை.

இப்போது சுமுகமாக வாழ முடிகிறது. இந்த நாட்டுக்கு சர்வதேச நாணயநிதியம் மற்றும் 18 நாடுகள் உதவின.

மேலும் கடன்கள் வழங்கி இன்னும் உதவிகளை செய்ய அந்த நாடுகள் முன்வந்துள்ளன. 5 வருடத்தில் இந்த வேலையை நான் முன்னெடுப்பேன் 10 - 15 வருடங்களில் இங்குள்ள பலர் பணக்காரர் ஆகிவிடுவார்கள்- என்றார். (ச)



# தராதரமின்றி தண்டனை

## சஜித் உறுதியளிப்பு

கொழும்பு, செப். 12

தகுதி தராதரம் பாராது உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் சூத்திரதாரிக்கு உரிய தண்டனையைப் பெற்றுக்கொடுப்போம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மல்கம் ரஞ்சித் ஆண்டகையிடம் வாக்குறுதியளித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வுக்கும், பேரயார் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகைக்குமிடையிலான விசேட சந்திப்பு கொழும்பு பேராயர் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு நீதிநிலைநாட்டப்படும். உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் நியமிக்கப்படுகின்ற நீதிமன்றக் கட்டமைப்புக்குத் தோள்கொடுப்போம். என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார். (ச)

# கடன் மறுசீரமைப்பு அறிவு அநுர தரப்புக்கு மத்திமம்

## ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டு

அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்திக்கு, கடன் மறுசீரமைப்பு தொடர்பிலான அடிப்படை அறிவு கூடக் கிடையாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த இலங்கை பிணைமுறி உரிமையாளர்கள் தமது கட்சி மற்றும் தேசிய மக்கள் சக்தி உள்ளிட்ட பல்வேறு தரப்புகளை சந்தித்து பேச்சு நடத்தியிருந்தது. இதன் போது, தேசிய மக்கள் சக்தியின் பொருளாதாரக் குழுவுக்கு கடன் மறுசீரமைப்பு குறித்த கொள்கைகளில் புரிதல் இல்லை என்றும் தற்பொழுது நடைமுறையில் உள்ள கடன் மறுசீரமைப்புத் திட்டத்துக்கு மாற்று யோசனை சமர்ப்பிப்பதாக தேசிய மக்கள் சக்தி கூறி வருவது தொடர்பில் தங்களது ஆச்சரியத்தை அவர்கள் வெளியிட்டனர். தற்போதைய கடன் மறுசீரமைப்பு நடைமுறையை குழப்பிக் கொண்டால் மோசமான நிலைக்குள் நாடு விழும் என்பதை நினைவில் நிறுத்திக் கொள்ளவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)

# யாழ்ப்பாணத்தில் கூறப்படும் விடயங்களால் பிரிவினைகள்

## சந்திரகாந்தன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணத்தில் கூறப்படும் விடயங்களைக் கேட்டு அழிவை நோக்கிச் செல்ல முடியாது. அவர்களது பிரிவினைவாத கருத்துக்களைப் பின்பற்றினால் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியாது. வடக்கு, கிழக்கில் நீண்ட காலமாக புரையோடிப் போயுள்ள உள்ளக பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களிக்க வேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார். (ம)

# திருட்டு அரசியலுக்கு முடிவுகட்டும் தருணம்

## வேட்பாளர் திலித் தெரிவிப்பு

கொழும்பு, செப்.12

நாட்டு மக்களை பல வருடங்களாக வறுமையில் தள்ளியுள்ள, திருட்டு அரசியலுக்கு முடிவு கட்ட வேண்டிய தருணம் வந்துள்ளதாக 'சர்வஜன பலய' கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் தொழிலதிபர் திலித் ஜயவீர தெரிவித்துள்ளார்.

திருடர்களின் அரசியலையும் பல தசாப்தங்களாக அவர்கள் மக்களை வறுமையில் வைத்திருக்கும் பழைய முறையையும் முடிவுக்குக் கொண்டுவருவதற்கு பொதுமக்களுக்கு தற்போது ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

எனவே மக்கள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி புதிய மாற்றத்தை உருவாக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)

# ரணிலின் தந்திரம் வாய்க்காது!

## அநுர தெரிவிப்பு

கொழும்பு, செப்.12

ஜனாதிபதித் தேர்தலில், கடைசி நிமிட தேர்தல் மோசடிகளுக்கு வாய்ப்பில்லை. ரணில் தோல்வியை ஏற்றுக்கொண்டு அமைதியாக வெளியேறுவார்.

-இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒரு தந்திரமானவர் என்றும், தேசிய மக்கள் சக்தியின் வெற்றியைத் தடுப்பதற்காக கடைசி நிமிடத்தில் எத்தகைய முயற்சியையும் மேற்கொள்வார் என்றும் அஞ்சப்படுகிறது. எனினும், தேசிய மக்கள் சக்தியின் வெற்றியைத் தடுக்க விக்கிரமசிங்கவால் எதுவும் செய்ய முடியவில்லை. எனவே ரணில் தோல்வியை ஏற்றுக்கொண்டு அமைதியாக வெளியேறுவார் என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன் என்று அநுரகுமார குறிப்பிட்டார். (ச)

# ஐ.மக்கள் சக்தி நாடகம்

## பெரமுன தெரிவிப்பு

கொழும்பு, செப்.12

வடக்கு மக்களுக்கு ஒன்றையும், தெற்கு மக்களுக்கு வேறொன்றையும் கூறி மக்களை ஏமாற்றும் அரசியலை ஐக்கிய மக்கள் சக்தி நடத்திவருகின்றது. ஒற்றையாட்சியை பாதுகாப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவேன் என நாமல் ராஜபக்ச உறுதியளித்துள்ளார்.

இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

அரசமைப்பில் 13 ஆவது திருத்தச்சட்டத்தில் உள்ள பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் வழங்கப்படமாட்டாது என நாமல் தெளிவாகக் கூறியுள்ளார் என்றும் குறிப்பிட்டார். (ச-44)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புதிய ஆட்சியில் மாற்றம் அவசியம்

## ஐ.நா.சபை வலியுறுத்து

**கொழும்பு, செப்.12**

**ஐக்கிய நாடுகள் சபை, இலங்கையின் பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் படையினரின் அத்துமீறல்கள் குறித்து அதிருப்தி வெளியிட்டுள்ளது.**

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க், ஜெனீவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 57 ஆவது அமர்வின் போது இந்த அதிருப்தியை வெளியிட்டுள்ளார். இலங்கை இந்த ஆண்டின் இறுதியில் ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களை நெருங்குகிறது.

இலங்கை கடந்த காலத்திலிருந்து விலகி புதிய போக்கை வகுக்கவேண்டும். புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகம் பொறுப்புக்கூறல், நீதி மற்றும் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தத் தேவையான உறுதியான மாற்றங்களைச் செய்ய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். (ச-இ)

# தேர்தல் ஸ்ரிக்கர்கள் சட்டம் உடன் பாயும்

கொழும்பு, செப். 12

வாகனங்களில் தேர்தல் பிரசார ஸ்ரிக்கர்களையோ, படங்களையோ, கொடிகளையோ காட்சிப்படுத்தவேண்டாமென தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

அவ்வாறு யாராவது காட்சிப்படுத்தினால் அவர்களைக் கைது செய்யுமாறும் தேர்தல் திணைக்களம் பொலிஸாருக்கு அறிவுறுத்தியுள்ளது.

தனியார் வாகனங்கள், பஸ்கள், முச்சக்கர வண்டிகள், போன்றவற்றில் சோதனைகளை மேற்கொள்ளுமாறும் தேர்தல் திணைக்களம் பொலிஸாருக்கு அறிவுறுத்தியுள்ளது.(ச-22,6)

# ஹெரோய்னுடன் கைதானவருக்கு மரணதண்டனை

கொழும்பு, செப். 12

கண்டி யட்டிநுவர வீதியில் 400 கிராம் ஹெரோய்னுடன் கைது செய்யப்பட்ட ஒருவருக்கு கண்டி மேல் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

குறித்த நபர் 2021 ஆம் ஆண்டு மே மாதம் 5 ஆம் திகதி வாகனத்தில் போதைப்பொருளைக் கொண்டு சென்றபோது பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# மீனவர்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, செப். 12

கடற்பரப்புகளிலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 60-65 கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசுவதால் மீனவர்கள் கடற்பரப்புக்குச் செல்வதைத் தவிர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மாத்தறையிலிருந்து அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையிலும், காங்கேசன்துறையிலிருந்து மன்னார் ஊடாக புத்தளம் வரையிலும் கடற்பரப்புகளுக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் பலத்த காற்று வீசுவதுடன் கடலும் கொந்தளிப்பாக காணப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# தேர்தல் நெருங்கும்போது இறக்குமதி வரி குறைப்பு

கொழும்பு, செப். 12

சில பொருட்களுக்கான இறக்குமதி வரியைக் குறைப்பதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது. இதன் பிரகாரம் மிளகு, பம்பஸ் என்பவற்றுக்கான வரி குறைக்கப்படவுள்ளது. மண்ணிற சீனி, பாதணிகள், மின்சார இயந்திர உபகரணங்கள் என்பவற்றுக்கான வரி மறுபரிசீலனை செய்யப்படவுள்ளது.

உள்நாட்டில் தயாரிக்கப்படும் மிதிவண்டி உதிரிப்பாகங்களுக்கான மூலப்பொருட்கள், அச்சக மூலப்பொருட்கள், லைட்டர் உற்பத்திக்கான மூலப்பொருட்கள், சலவை இயந்திரங்கள், புடவை உற்பத்திகள் போன்றவற்றுக்கான வரி நீக்கப்படவுள்ளது. (ஒ-6)

# எம்.பி.களுக்கு துப்பாக்கி

கொழும்பு, செப். 12

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக, 225 நாடாளுமன்ற உறுப்பினர்களில் பத்து பேரைத் தவிர மற்ற அனைவரும் தங்களின் தனிப்பட்ட பாதுகாப்புக்காகப் பாதுகாப்பு அமைச்சிடம் இருந்து தலா இரண்டு துப்பாக்கிகளைப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# தலைமறைவில் 19 வேட்பாளர்கள்

கொழும்பு, செப்.12

19 ஜனாதிபதி வேட்பாளர்கள்இதுவரை ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான பிரசாரங்கள் எதனையும் மேற்கொள்ளவில்லை என தகவல்கள் வெளியாகியுள்ளதாக பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

சிலர் கட்சி அலுவலகங்களைக் கூட அமைக்கவில்லை என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட 38 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ள நிலையில் தற்போது பத்து வேட்பாளர்கள் மாத்திரமே தமது கொள்கைகளை முன்வைத்து பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதேவேளை, சில வேட்பாளர்களை கண்டுபிடிக்கப்பட முடியவில்லை என்றும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் தெரிவிக்கின்றன. (ச)




**எ**ப்பிடி இருந்த அர்ச்சுனா இப்பிடியாகிட்டாரே எண்டு பரிதாபப்படவேண்டிய நிலைமை இப்ப. ரண்டு மாதத்துக்கு முன்னம் உந்த டாக்குத்தர் அர்ச்சுனா எண்டா பேஸ்புக்கே கதிகலங்கிச்சுது. அவரின்ர லைவ் வீடியோக்களை ஆயிரக்கணக்கான ஆக்கள் விழுந்தடிச்சுப் பாத்திச்சினம். ஆனால் இப்ப எல்லாமே தலை கீழாப் போட்டுது. சாவகச்சேரி ஆஸ்பத்திரிப் பிரச்சினையோட வாயைச் சும்மா வைச்சிருந்தால் அவருக்கு இப்பிடியொரு நிலைமை வந்திருக்காது. ஆனாலும் கெடுகுடி சொற்கேக்காதே. அதால ஆள் இப்ப காலவைக்கிற இடமெல்லாம் கண்ணிவெடியாக் கிடக்குதாம்.

ஏற்கனவே சாவகச்சேரி ஆஸ்பத்திரிப் பிரச்சினையில ஆர் மேலயெல்லாம் டாக்குத்தர் அர்ச்சுனா சேத்தையள்ளி அடிச்சாரோ அவையெல்லாம் போட்ட கேஸில அர்ச்சுனாவுக்காக ஆஜரான லோயருக்கு எதிரா பேஸ்புக்கில ஒரு லைவ் விட்டிருக்கிறார், அதுக்குப் பிறகு அந்த லோயர் எப்பிடி அர்ச்சுனாவுக்கு சப்போர்ட் பண்ணுவார். இப்ப ரண்டுபேருக்கும் இடையில தெறிப்பு வந்து எதிரும் புதிருமா நிக்கினம். அதைமாதிரி மன்னார் ஆஸ்பத்திரிக்குப் போகேக்க தன்னோட கூட்டிக்கொண்டு போன யூரியூப் பெடியனோடையும் அர்ச்சுனா கொழுவல் எடுத்திருக்கிறார். கொஞ்ச நாளுக்கு முதலெல்லாம் அர்ச்சுனாவை கடவுள் எண்டளவுக்கு புகழ்ந்து தள்ளின அந்த யூரியூப்காரர் இப்ப அதே அர்ச்சுனாவைக் கழுவிக் கழுவி ஊத்துரார். அதோட விடேலை அர்ச்சுனா. லோயரைக் கடிச்சு, யூரியூப்காரரைக் கடிச்சு, கடைசியா தம்பிராசாவையே கடிச்சுப்போட்டார்.

டாக்குத்தர் அர்ச்சுனா சாவகச்சேரி ஆஸ்பத்திரியில கலகத்தை தொடங்கின காலத்தில இருந்து அவருக்கு பின்னாலையும் முன்னாலையும் திரிஞ்சவர்தான் தம்பிராசா. முதல்ல அர்ச்சுனாவின்ர ஆதரவாளராகி பிறகு அவர் போற இடமெல்லாம் புறத்தால் திரியிறதே தம்பிராசாவுக்கு தொழிலாவும் போட்டுது. அர்ச்சுனான்ர நிழல் கூட போகாட்டியும் தம்பிராசா எப்பிடியோ போடுவார். அதால அவரைப் பொலிஸெல்லாம் பிடிச்சு வெருட்டி வெளியில ஓடு எண்டு கலைச்ச சம்பவங்களும் இருக்கு. இப்பிடிப்பட்ட தம்பிராசா, போன கிழமை ஒரு காரியம் செய்தவர். வழக்கம்போல அர்ச்சுனா பேஸ்புக் லைவ் வரேலை, போனும் எடுக்க தூக்கேலை எண்ட உடனை 'அவருக்கு ஏதோ நடந்திட்டுது. தற்கொலை ஏதும் செய்திட்டாரோ தெரியேலை' எண்டு பொலிஸில முறைப்பாடு குடுத்திருக்கிறார். ஆனால் பொலிஸ் அதைப்பற்றி பெரிசா அக்கறை எடுக்கேலை. உடன தவராசா சாவகச்சேரி பொலிஸ் ஓ.ஐ.சி.யோட சண்டை பிடிச்சு, ஒருமாதிரி அவையைக் கூட்டிக்கொண்டு போய் சாவகச்சேரி ஆஸ்பத்திரி குவாட்டர்ஸ் கதவை உடைச்சுக் கொண்டு போனால், அங்க டாக்குத்தர் அர்ச்சுனா நிம்மதியா நித்திரை கொண்டபடி இருந்திருக்கிறார். அவ்வளவுதான், தங்களை அலைக்கழிச்ச ஆத்திரத்தில பொய்முறைப்பாடு குடுத்ததெண்டு தம்பிராசாவை பொலிஸ் பிடிச்சு உள்ளுக்க போட்டுட்டுது. பொலிஸ்தான் அப்பிடியெண்டால், "உந்தாள் எனக்கு வீணாக் கெட்டபேரை வாங்கித் தந்திட்டுது" எண்டு அதுக்கும் ஒரு லைவ் வீடியோ போட்டு தம்பிராசாவையும் காய்வெட்டியிருக்கிறார் டாக்குத்தர் அர்ச்சுனா.

தனக்கு தொண்ணூறாயிரம் ஃபலோவர்ஸ் இருக்கெண்டு சொன்ன அர்ச்சுனா பிணைவைக்கக் கூட ஆளில்லாமல் அலைஞ்சு திரியிறாராம்.



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், செப்.12

யாழ். அராலி கிழக்கு மெஞ்ஞான வைரவர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறும் உற்சவத்தில், இறுதி நாள் எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 10 வலம்புரிச் சங்கு, 98 இடம்புரிச் சங்கு வைத்து 108 சங்காபிஷேக பூஜை இடம்பெற்று, புதிய பாடல் வெளியீடு மற்றும் கலைஞர்கள் கௌரவிப்பும் நடைபெறும். (ச-45)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். நண்பர்களிடம் எதிர்பார்த்த காரியம் முடிவதில் தாமதம் ஏற்படும். அவ்வப்போது மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்படும்.

**இடபம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். சிலருக்கு நண்பர்களிடம் எதிர்பார்த்த பணம் கிடைக்கவாய்ப்பு உண்டு. உறவுகளிடம் எதிர்பார்த்த காரியம் நல்லபடி முடியும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**மிதுனம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டாகும். சகோதர வகையில் சுபச்செலவுகள் ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**கடகம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். உறவினர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கக்கூடும். சுபநிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும். உறவுகளால் நன்மை உண்டாகும். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்து விடுவீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிலருக்கு தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு உண்டாகும். காரியங்கள் வெற்றிகரமாக முடியும்.

**கன்னி:** உற்சாகமான நாள். குடும்பத்தில் ஏற்பட்டிருந்த குழப்பங்கள் நீங்கும். நண்பர்களால் ஆதாயம் கிடைக்கும். குடும்ப விடயமாக சிறு பயணம் மேற்கொள்ள நேரிடும்.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத் துணை ஒத்துழைப்புத் தருவார். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** தெய்வ அனுக்கிரகம் நிறைந்த நாள். காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். திடீர் செலவுகளால் கையிருப்புக் கரையும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் இணக்கமாக நடந்து கொள்வது நல்லது.

**மகரம்:** எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். சிலருக்கு தாய்வழி உறவினர்களால் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படக்கூடும். உடல்நலனில் கவனம் தேவை. உறவுகளுக்காக செலவு செய்யவேண்டி வரும்.

**கும்பம்:** பணஉதவி கிடைக்கும். சகோதரர்களிடம் எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். மாலையில் உறவினர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்க வாய்ப்பு உள்ளது.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்கள் வகையில் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டிவரும். பிள்ளைகள் பொறுப்பாக நடந்துகொள்வது மகிழ்ச்சி தரும்.



# இப்படி மதகிருந்தால் எப்படிப் பயணிப்பது?

### பயணிகள் ஆதங்கம்

யாழ்ப்பாணம், செப்.12

**வலி. தென்மேற்கு பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட நவாலி தெற்கு கலையரசு வீதியில் பொருத்தமற்ற நிலையில் அமைக்கப்பட்டுள்ள மதகுகளால் பெரும் சிரமத்தை எதிர்கொள்வதாக பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.**

இதுதொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நவாலி தெற்கு கலையரசு வீதியில் சிறிய வடிகால் அமைப்பு முறை முன்பு காணப்பட்டது.

இந்த நிலையில் குறித்த வீதியின் மழை நீர் குறுக்கே பாயும் இரண்டு பகுதிகளில் மதகுகளை அமைக்க பிரதேசசபை நடவடிக்கை எடுத்து, மதகு அமைக்கப்பட்டபோது நீர் பாயும் கொள்ளளவை விட ஆழமாக மதகு வெட்டப்பட்டது. பின்பு தரையிலிருந்து மிக உயரமாக மதகு அமைக்கப்பட்டு தற்போது அதற்கு மேலாக கிரவல் மண் பரப்பப்பட்டுள்ளது.

இதனால் அந்த மதகினூடாக பாடசாலை மாணவர்கள், வயோதிபர்கள் எனப் பலரும் போக்குவரத்துச் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். ஒப்பந்தகாரர்களால் மதகு அமைக்கப்பட்டபோது பணியை ஒழுங்காக செய்துள்ளார்களாக என பிரதேசசபையினரால் பார்வையிடாதமையால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

எனவே வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபை அதிகாரிகள் இதுதொடர்பில் விரைவாக நடவடிக்கை எடுத்து இந்த வீதியூடான போக்குவரத்தை இலகுபடுத்தவேண்டும் - என்றனர். (ச-25,125)

# வேட்டைத்திருவிழா

யாழ்ப்பாணம், செப். 12

வரலாற்றுப் பிரசித்திபெற்ற தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய வருடாந்த பெருந் திருவிழாவின் வேட்டைத் திருவிழா நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் இடம் பெறவுள்ளது. நாளை மாலை 5 மணியளவில் கைலாசவாகனத் திருவிழா நடைபெறவுள்ளது. (ஒ-66)

# தரிசு நிலங்களில் பெரும்போகம்!

யாழ்ப்பாணம், செப்.12

யாழில் இம்முறை பெரும்போகத்தை முன்னிட்டு தரிசுநிலங்களாகக் காணப்படும் இடங்களிலும் நெற்செய்கையில் ஈடுபடுவதற்கான முன்னேற்பாடுகளை விவசாயிகள் மேற்கொண்டுவருகின்றனர். கடந்த பல வருடங்களாக செய்கையின்றி பற்றைகளால் மூடி வளர்ந்திருக்கும் தரிசு நிலங்களை துப்புரவு செய்து அதில் நெற்செய்கையில் ஈடுபடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அரிசியின் விலை அதிகரிப்பு காரணமாக விவசாயிகள் காலபோக செய்கையில் ஆர்வம் காட்டியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-25, 17)



### தமிழ்த் தினப் போட்டி

# முருகானந்தா கல்லூரி மாணவி 3 ஆம் இடம்!

கிளிநொச்சி, செப்.12

வடமாகாண தமிழ்த் தினப் போட்டியில் கிளிநொச்சி முருகானந்தா கல்லூரியில் இருந்து பங்கு கொண்ட மாணவர்களில் க.நேத்ரா பிரிவு 4 பாவோதல் போட்டியில் 3 ஆம் இடம் பெற்றுள்ளார்.

வெற்றியீட்டிய மாணவிக்கும் மாகாண மட்டப் போட்டிகளில் கலந்து கொண்டவர்களுக்குமான பாராட்டும் பரிசில் வழங்கல் நிகழ்வும் கல்லூரியின் முதல்வர் அ.பங்கையற்செல்வன் தலைமையில் நடைபெற்றுள்ளது. (ச-22,13)

# மகாகவி நினைவு தினம்

வவுனியா, செப்.12

மகாகவி பாரதியாரின் 103ஆவது நினைவு தினம் வவுனியா நகரசபை மற்றும் தமிழ் விருட்சத்தின் ஏற்பாட்டில் வவுனியா குருமன்காட்டுச் சந்தியில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலையடியில் நேற்று புதன்கிழமை நடைபெற்றது. (ச-45-110)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அமெரிக்காவின் தோல்வி!

இரட்டைக் கோபுரங்கள் மற்றும் அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகனில் அல் குவைதா அமைப்பால் நடத்தப்பட்ட கொடூரத் தாக்குதலின் 23ஆவது நினைவுதினம் அமெரிக்காவில் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், 23 ஆண்டுகள் கடந்த போதிலும், பயங்கரவாதம் என்றால் என்ன? உரிமைப்போர் என்றால் என்ன? என்ற குறைந்தபட்சப் புரிதல்கூட இல்லாமல்தான் நேற்றைய நாளைக் கடந்திருக்கின்றது வொஷிங்டன்.

2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி அல்குவைதா பயங்கரவாத அமைப்பு முன்னெடுத்த தாக்குதலில் அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்களும், இராணுவத் தலைமையகமான பென்டகனும் தாக்கப்பட்டன. இந்தத் தாக்குதல் உலகளாவிய ரீதியில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. அதாவது, 'பயங்கரவாதத்துக்கு எதிரான போர்' என்பதை தன் பிரதான கொள்கையாக வரித்துக்கொண்ட அமெரிக்கா, நேட்டோ நாடுகளின் பங்கெடுப்புடன், உலகிலுள்ள அத்தனை ஆயுதக் குழுக்களையும் வேட்டையாடத் தொடங்கியது. ஆனால், பயங்கரவாதத்துக்கும் உரிமைப்போருக்கும் இடையிலான வித்தியாசம் வல்லரசுகளின் கண்களுக்குப் புலப்படவேயில்லை. ஒரு நாட்டில் ஆட்சியமைத்திருக்கும் 'அரசுக்கு எதிராக ஆயுதம்தூக்கிய அத்தனை குழுக்களும் பயங்கரவாதக் குழுக்கள்' என்பதுதான் இந்த சர்வ வல்லமை பெற்ற தரப்புகளின் இரும்பு இதயங்களுக்குப் புலப்பட்டது.

ஆதலால், உலகின் பல்வேறு நாடுகளில் முன்னெடுக்கப்பட்ட உரிமைப் போராட்டங்கள் அமெரிக்காவால் நசுக்கப்பட்டன. இலங்கையில் விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டமைக்கும் அமெரிக்கா ஒரு முக்கிய காரணம். சிரியாவில் இட்லிப், பல்மைரா, டமஸ்கஸ் போன்ற நகரங்களில் செயற்பட்ட உரிமை மீட்புக் குழுக்கள் துடைத்தெறியப்பட்டமை அமெரிக்காவால்தான். பலஸ்தீனத்தில் ஹமாஸ் பலம்குன்ற வைக்கப்பட்டதும் அமெரிக்காவால்தான். ஆனால், இத்தனைக்கும் அழிக்கப்பட வேண்டிய தரப்புகள் எவையும் அமெரிக்காவால் அழிக்கப்படவேயில்லை. உலகின் அதி அபாயகரமாக கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் அறியப்பட்ட போகோஹறம் அமைப்பு இன்று இன்னுமின்னுமாய் வளர்ந்திருக்கின்றது. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு ஈராக் மற்றும் சிரியாவை மட்டுமல்லாமல் இன்று ஆபிரிக்காவையும் இரையாக்க ஆரம்பித்திருக்கின்றது.

அத்துடன் முன்னெல்லாம், ஆயுத மோதல்களும், துப்பாக்கிச் சூடுகளும், குண்டுவெடிப்புக்களும்தான் பயங்கரவாதம் என்ற பார்வையில் கொண்டுவரப்பட்டது. இப்போதோ, சுரங்க ரயில் பாதைகளில் மேற்கொள்ளப்படும் கத்திக்குத்துத் தாக்குதல்கள்கூட பயங்கரவாதம் என்றாகிவிட்டது. அவ்வளவுதூரம் பயங்கரவாதமும் தீவிரம் பெற்றுவிட்டது.

ஆக, உலகப் பயங்கரவாதம் என்ற ஒன்றை அழிப்பதாகக் கங்கணம் கட்டிக்கொண்டு எந்த இரு அமைப்புகளை முதன்மை இலக்குகளாகக் கொண்டு அமெரிக்கா களமிறங்கியதோ (அல் குவைதா, தலிபான்) அந்த இரு அமைப்புகளை கிஞ்சித்தும் நெருங்க முடியவில்லை. இந்தப் போரில் அமெரிக்கா செய்ததெல்லாம் தம் வாழ்வுரிமைக்காகவும் அரசியல் அபிலாகைளுக்காகவும் மக்களின் பேராதரவுடன் ஆயுதம் ஏந்திப் போராடிய போராளிகளை கொன்றுதள்ளியமைதான். உரிமைப் போராட்டத்துக்கும் பயங்கரவாதத்துக்கும் வேறுபாடு தெரியாத சர்வ வல்லமை பொருந்திய 'ஜாம்பவான்'களிடம்தான் நாம் நீதியைத் தேடிக் கொண்டிருக்கின்றோம் என்பதையும் இங்கு நினைவில் கொள்க!.




## லசந்த, வஸிம் தாஜுதீன்

# கொலையாளிகள் சுதந்திர நடமாட்டம்

### சி.ஐ.டி. முன்னாள் பணிப்பாளர் ரவி செனிவிரத்ன ஆதங்கம்

**கொழும்பு, செப். 11**

**சண்டே லீடர் பத்திரிகை ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவையும், றகர் வீரர் வஸிம் தஜுதீனையும் கொலை செய்தவர்கள் சுதந்திரமாக நடமாடுவதாக குற்றப்புலனாய்வுப்பிரிவின் முன்னாள் பணிப்பாளர் ரவி செனிவிரத்ன தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது.

லசந்த விக்கிரமதுங்க 2009ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கோத்தாபய ராஜபக்ஷவின் ஊழல் தொடர்பில் நீதிபதி முன் சாட்சியமளிக்கவிருந்த நிலையில் சுட்டுக்கொல்லப்பட்டார். வஸிம் தாஜுதீன் 2012ஆம் ஆண்டு மே 17ஆம் திகதி விபத்தில் கொல்லப்பட்டார். பின்னாளில் இது ஒரு கொலை என விசாரணைகளில் தெரிய வந்தது. இந்த விசாரணைகளை முன்னெடுக்க வேண்டாமென பொலிஸ் உயரதிகாரிகள் அப்போது தெரிவித்திருந்தனர் - என்றார். (ஒ-6)

## அக்ரஹாராவுக்காக 1,000 ரூபா அறவீடு

கொழும்பு, செப். 12

அக்ரஹாரா மருத்துவ காப்புறுதிக்கென அரச ஊழியர்களிடமும், ஓய்வூதியர்களிடமிருந்தும் அடுத்த ஆண்டு ஜனவரி முதல் மாதாந்தம் ஆயிரம் ரூபா அறவிடப்படவுள்ளது. அமைச்சரவை இதற்கான அனுமதியை வழங்கியுள்ளது. (ஒ,6)

## 450 மில்.டொலர் கடன் அடைப்பு

கொழும்பு, செப்.12

இந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் இலங்கை மத்திய வங்கி 450 மில்லியன் அமெரிக்க டொலரை இந்திய ரிசர்வ் வங்கிக்குக் கடன் செலுத்தியுள்ளது.

கடந்த ஜூன் மாத நிலைவரப்படி, இந்திய ரிசர்வ் வங்கிக்கு மத்திய வங்கி 2001.43 மில்லியன் அமெரிக்க டொலர் செலுத்த வேண்டியிருந்தது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## கோதுமைத் தவிடு சீனாவுக்கு ஏற்றுமதி

கொழும்பு, செப்.12

இலங்கையிலிருந்து சீனாவுக்கு கோதுமை தவிடுத் துகள்கள் ஏற்றுமதி செய்ய அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. கோதுமை தயாரிப்புகளின் போது எமது நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படும் கோதுமை விதைகளில் 20 சதவீதம் தவிடாக அகற்றப்படுகின்றது. (ச)

## புலமைப்பரிசில் பரீட்சை பயிற்சி வகுப்புகள் தடை!

கொழும்பு, செப்.12

2024 ஆம் ஆண்டுக்கான தரம் -5 புலமைப் பரிசில் பரீட்சையை இலக்காகக் கொண்டு அனைத்துப் பயிற்சி வகுப்புகள், பரீட்சை தொடர்பான மாதிரி வினாத்தாள்களை அச்சிடுதல், வெளியிடுதல் ஆகியவற்றுக்கு நேற்று நள்ளிரவு முதல் பரீட்சை முடிவடையும் வரை தடைவிதிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது. (ச-இ)

**நாளை**

13.09.2024

வெள்ளிக்கிழமை - ஆவணி - 28

சுபநேரம் : 06.03 - 07.33

ராகுகாலம் : 10.33 - 12.03

**நாளொரு நல்வார்த்தை**

ஒரு முறை வந்தால் அது கனவு
இரு முறை வந்தால் அது ஆசை.
பல முறை வந்தால் அது இலட்சியம்...!

- ஏ. பி. ஜே. அப்துல் கலாம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருத்தித்துறை மருத்துவமனையில்

# வெயில் கொடுமை நோயாளர் அவதி!

**யாழ்ப்பாணம், செப். 12**

**பருத்தித்துறை ஆதார மருத்துவமனை புதிய கட்டடத்தின் நுழைவாயிலில் இருக்கைகள் போடப்பட்டிருக்கும் பகுதியில் வெயில் நேரடியாக படுவதால் நோயாளர்கள் உள்ளிட்டோர் பெரும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.**

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் புதிதாக திறக்கப்பட்ட விபத்து மற்றும் அவசர சிகிச்சை கட்டடத் தொகுக்கு வெளிநோயாளர் பிரிவு உள்ளிட்ட முக்கியமான செயற்பாடுகள் இடம்மாற்றப்பட்டுள்ளன. இவ்வாறு வெளிநோயாளர் பிரிவு உள்ளிட்ட அலகுகளில் சிகிச்சை பெறுவதற்காக வரும் நோயாளிகள் மற்றும் அவர்களுடன் உதவிக்கு வருபவர்கள் இருப்பதற்காக புதிய கட்டடத்தின் பிரதான நுழைவாயில் பகுதியில் இருக்கைகள் போடப்பட்டுள்ளன.

அந்தப் பகுதி கிழக்கு முகமாக திறந்த வெளிஅமைப்புடன் காணப்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ள காரணத்தினால் காலை 7 மணி முதல் நண்பகல் வரை வெயிலின் தாக்கம் நேரடியாகவே கதிரைகள் போடப்பட்டிருக்கும் இடத்தில் படுவதனால் நோயாளர்கள் பெரும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

இனிவரும் மாதம் மாரி மழை காலம் என்பதனால் முற்றிலும் திறந்தவெளி அமைப்புடன் காணப்படும் இப்பகுதியானது மழையில் நனையும் நிலை ஏற்படும் என்பதுடன் அவ்வாறு ஏற்படுமாக இருந்தால் அப்பகுதியை முற்றாகப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-100)

## பாரதியார் நினைவுதின நிகழ்வு

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் நினைவு தினத்தை முன்னிட்டு லிங்காஸ்வர கீதம் வழங்கும் 'பன்முக நோக்கில் பாரதி' எனும் விசேட நிகழ்வு லிங்காஸ்வர கீத இயக்குநர் ஷாஜிதா அட்ஜெயலிங்கம் தலைமையில் வடமராட்சியில் நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராஜா, விருந்தினராக யாழ். இந்தியத் துணைத் தூதர் சாய் முரளி ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் பாரதியாரின் படைப்புகளை இசை, நடனம், இலக்கியம் என்னும் பல் கோணப் பார்வையில் வெளிப்படுத்தும் நிகழ்வுகள் இடம்பெற்றன. (ச-45-20)


## வேலையாட்கள் தேவை

- சமையல் வேலை ஓரளவு தெரிந்த தொழிலாளி
- தோட்ட வேலையில் ஆர்வமுடைய தொழிலாளி
- சமையல் வேலை செய்யக்கூடிய பெண் தொழிலாளி

தொடர்பு: 077 953 0496


## 29ஆம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில் மழலையாய் 12.06.1979

விண்ணில் தெய்வமாய் 12.09.1995

செல்வன்

**சிறிஸ்கந்தராஜா றமேஷ்குமார்**

(யா/ யூனியன் கல்லூரி ஆண்டு – 11 மாணவன்)

கள்ளமற்ற சிரிப்பு கனிவான பார்வை
கோபத்தில் பொங்கிடினும் மாறாத பாசம்
நிலவு கூட இவ்வுலகை
ஒரு நாள் நிராகரித்து விடுகிறது - ஆனால்
ஒரு நிமிடம் கூட உன்னை
நினைக்காத நேரமில்லை ரமேஷ் ....!

ஏழாலை கிழக்கு,
ஏழாலை

என்றும் உன் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

## கேட் மிடில்டன் முழு நலம்

லண்டன், செப். 12

பிரிட்டனின் இளவரசி கேட் மிடில்டன், புற்றுநோய் பாதிப்பிலிருந்து முழுமையான குணம் பெற்றுள்ளதாக அறிவித்துள்ளார். இரண்டு நாள்களுக்கு முன்னர், அவருக்கான சிகிச்சைகள் நிறைவுற்றதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## மரண அறிவித்தல்

### கந்தப்பு விமலதாஸ்

(உரிமையாளர்-கவிதாஸ் ஸ்ரோர்ஸ் பூண்டுலோயா-நுவரெலியா)



தோற்றம் 11.08.1973 — மறைவு 09.09.2024

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும், ஏழாலை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தப்பு விமலதாஸ் அவர்கள் கடந்த (09.09.2024) திங்கட்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.09.2024) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குப்பிழான் காடாகடம்பை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

ஏழாலை கிழக்கு
ஏழாலை.

தகவல்: குடும்பத்தினர்.
ம.சுரேஸ் (மச்சான்) - 077 201 9820
க. விஜயதாஸ் (சகோதரன்) - 077 623 9558

(CS 1330) V-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 13 . 01 . 1947 — மறைவு 11 . 09 . 2024

### திருமதி மார்க்கண்டு பரமேஸ்வரி

அம்மன் கோவிலடி புளியங்குளத்தை பிறப்பிடமாகவும் புங்குடுதீவு 5ம் வட்டாரத்தை வதிவிடமாகவும் தற்போது ஆறுகால்மடம் ஆனைக்கோட்டையில் வசித்தவருமான திருமதி மார்கண்டு பரமேஸ்வரி அவர்கள் நேற்று (11.09.2024) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாரிமுத்து-மாரியம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சுப்பையா-பருவதம் தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்ற மார்க்கண்டு அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சொர்ணரூபன் மற்றும் பகீரதி, ஜெயரூபன், மோகனரூபன் (மோகன் வெற்றிலைக் கடை-திருநெல்வேலி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் அலெக்ஸ்குமார், அஞ்சலா (சசி), ஒளிமதி ஆகியோரின் அன்பு மாமியாரும் இராமச்சந்திரன், நாகமணி, தவமணிதேவி, மகேஸ்வரி, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற லட்சுமிதேவி மற்றும் சரஸ்வதி, முத்துச்சாமி, தர்மலிங்கம், புவனேஸ்வரி காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் கமலாம்பாள், கிருஸ்ணபிள்ளை ஆகியோரின் மைத்துனியும் ஜிந்துசன், சிவானுசன், நிதுர்சன்-துனிஸ்ரா, டினுசன், தானுசன், கம்சன், கம்ஷவி, மதுஷவி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.09.2024) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் ஆறுகால்மடம் ஆனைக்கோட்டையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 1.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பகீரதி (மகள்) - 077 844 2703
ஜெயரூபன் (மகன்) - 077 500 6949
மோகனரூபன் (மகன்) - 077 714 0055

தகவல்: குடும்பத்தினர்.

(CS 1329) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 27 . 07 . 1958

மறைவு 13 . 08 . 2024

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் அராலியை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் சின்னத்தம்பி கந்தசாமி

(முருகானந்தா தொழிலக உரிமையாளர்)

பாசமழை பொழிந்து
பாரினில் எமை வளர்த்தீர்
பாசமுடன் தேட பறந்து
எங்கே சென்றீர்கள் அப்பா....

13.08.2024 அன்று இறைபதம் அடைந்த எங்கள் தந்தையின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (12.09.2024) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற்று அன்னாரது ஆத்ம சாந்திக்கான பிரார்த்-தனையோடு தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அன்னாரின் மரணச்செய்தி அறிந்து நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்து துயர் பகிர்ந்தவர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் பங்குகொண்டவர்களுக்கும், தொலைபேசி, முகநூல், மின்னஞ்சல் மூலமாக எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையம் சாத்தியவர்களுக்கும், இன்றுவரை எமக்கு சகல உதவிகளையும் செய்துவரும் அன்பு நெஞ்சங்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அராலி வடக்கு,
செல்வா வீதி, வட்டுக்கோட்டை.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்
075 039 3153

(CS/56173) J-1

# அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய அழைப்பு



மலர்வு 13 . 01 . 1972

உதிர்வு 03 . 08 . 2024

கடந்த 03.08.2024 சனிக்கிழமை அன்று சிவபதம் அடைந்த
எங்கள் குடும்பத் தலைவி

## ஆனந்தன் சிவானந்தகௌரி (ஜேந்தி)

திதி : சதுர்த்தசி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்றுமுன்தினம் (10.09.2024) செவ்வாய்க்கிழமை காலை 08.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (12.09.2024) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பட்டினசபை வீதி,
சங்கானை.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்
077 254 0001

(CS/56138) J-1

# பெயர் மாற்றம்

மில் ஒழுங்கை மல்லாகத்தைச் சேர்ந்த செல்லையா கோபால் ஆகிய நான் எனது பெயரை செல்லையா கோபாலாச்சாரி என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் செல்லையா கோபாலாச்சாரி என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத் தருகின்றேன்.

(CS/56176) J-1

செல்லையா கோபாலாச்சாரி

# கண்ணீர் அஞ்சலி

## செல்வரத்தினம் தவமலர்

யாழ் போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திருமதி செல்வநிதி ராமகுமார் அவர்களின் அன்புத் தாய் செல்வரத்தினம் தவமலர் அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

தாதியர் நலன்புரி சங்கம்
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

# மஹாயாகம்

சாவகச்சேரி அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான மஹா யாகம் தென்மராட்சி இந்து அந்தணக் குருமார் ஒன்றியத்தின் அனுசரணையுடன் இன்று வியாழக்கிழமை அதிகாலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளது. மஹாயாகத்தில் விஷேட 108 திரவிய ஹோமமும், விஷேட 108 திரவிய அபிஷேகமும் இடம்பெறவுள்ளன. (ரி)

# REGIONAL DIRECTORATE OF HEALTH SERVICES, JAFFNA
## INVITATION FOR BIDS

**Procurement of supply & Installation of Air conditioner 18000 BTU, 24000BTU**

A. The Regional Procurement Committee invites sealed bids from eligible and qualified bidders for the Supplies, Works as specified following Tables.
   01) **Air conditioner 18000 BTU (06 nos)**
   02) **Air conditioner 24000 BTU (01 nos)**
   Bidding will be conducted through National Competitive Bidding Procedure

B. To be eligible for contract award the successful bidder shall not have been blacklist and shall need the following requirements
   01) Bidders shall have valid business registration
   02) Bidders shall have Manufacturer Authorization for their goods.

C. Interested eligible bidders may obtain further information from the Regional Director of Health Services, Jaffna Contact No (021 2222278/2214966 ext 208), during the office hours and inspect the Bidding Documents at the same address any working days for 9.00am to 3.00pm except 12.30 to 13.30 hours

D. A complete set of English Bid documents may be purchased by interested bidders on the submission of "Application for Bid Documents" available in this office and upon payment of a **non-refundable** fee as specified in the table by cash on working days from **12.09.2024 to 26.09.2024** during 09.00 Hours to 15.00 Hours.

E. Bids must be delivered on or before 10.00 AM of 27.09.2024 . The address given below in the tender box available at the Room . Bids will be opened immediately after the closing of the bids in the presence of the bidders or their representatives.

F. Bid shall be valid for a remind 90 days from the last date fixed for receiving of Bids or any extended period and Bid Security valid for 118days from the bid opening

G. Pre bid meeting Will be on **19.09.2024** at 10.00 am at RDHS Office Health Village Pannai

H.Regional Procurement committee will be the **right** to make final decision in regard the accept or reject Bids

Table -1

| Reference No | Item | Qty | Non refundable fees | Bid Security | Bid Security Validity period |
|---|---|---|---|---|---|
| NP/RDHS/PSDG/2024/EE/03 | Supply & Installation of Air conditioner 18000BTU | 06 | 1,500.00 | 14,450.00 | Till 22.01.2025 |
| | Supply & Installation of Air conditioner 24000BTU | 01 | | | |

**Chairman -Regional Procurement committee**
**RDHS Office**
**Jaffna**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல்

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
## சபை நிதி - 2024 (கட்டம் VIII)

01. வலிகாமம் கிழக்கு பிரதேச சபையானது சபைநிதியினைக் கொண்டு கீழ்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களுக்கு கொடுப்பனவிற்கு பயன்படுத்த உத்தேசித்துள்ளது.

02. **தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.** வலிகாமம் கிழக்கு பிரதேச சபை சார்பாக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோருகின்றார்.

03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 01.03.2024 ஆம் திகதிய 01/2024 ஆம் இலக்க பொது அரச நிதி சுற்றறிக்கைக்கு அமைவாகவும் கேள்வி கோரப்படுகின்றது கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், கீழுள்ள அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில் கட்டுமான துறையில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

04. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

05. பெறுமதிசேர்வரி (VAT) பதிவினைக் கொண்டவர்கள் கேள்விகள் சமர்ப்பிக்கப்படும்போது பெறுமதிசேர்வரி (VAT) சான்றிதழ் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டுமே சபையினால் பெறுமதிசேர்வரி (VAT) கொடுப்பனவு மேற்கொள்ளப்படும்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர், பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர் (தொலைபேசி இல: -021-205 8867 )** அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09:00 மணிமுதல் மாலை 3:00 மணிவரை 2024.09.12 ஆம் திகதியில் இருந்து 2024.09.26 ஆம் திகதி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **தலைவர், பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.** அவர்களிடமிருந்து 2024.09.12 ஆம் திகதியிலிருந்து 2024.09.26 ஆம் திகதி வரையான வேலை நாட்களில் காலை 09:00 மணி தொடக்கம் மாலை 3:00 மணிக்கும் இடையில்
மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2000/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.

08. கேள்வியினை இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர் பெறுகைக்குழு , வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி புத்தூர், யாழ்ப்பாணம்.** எனும் முகவரிக்கு 2024.09.27 ஆம் திகதி மு.ப 10:00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

09. கேள்வி, கேள்விப்பிணை செல்லுபடியாகும் காலம், கேள்வி பிணை வைப்புத் தொகை என்பன கீழே அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளது

10. கேள்வி கோரல் பற்றிய முன் கேள்வி கூட்டம் வலிகிழக்கு பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் 2024.09.19 ஆம் திகதி மு.ப.10:30 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்தில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பிட்டுத் தொகை (மில்லியனில்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து கேள்வி செல்லுபடியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41(13)/4/Council/ DR/PVIII/2024/34 | நிர்வேலி சிறுவர் பூங்கா அமைத்தல் கட்டம் III , நீர்வேலி | 12.06 | 120 நாட்கள் | C6& C5 ( கட்டட நிர்மாணம் ) | 77 நாட்கள் | 121,000.00 | 10.01.2025 |
| NP/14/41(13)/4/Council/ PVIII /2024/35 | கலாணை வீதி புனரமைப்பு – அச்சுவேலி தெற்கு | 6.32 | 60 நாட்கள் | C7 & C6 (வீதி நிர்மாணம் ) | 77 நாட்கள் | 64,000.00 | 10.01.2025 |
| NP/14/41(13)/4/Council/ PVIII/2024/36 | பிராமணவோடை வீதி புனரமைப்பு -- கட்டம் II , கோப்பாய் வடக்கு | 5.84 | 60 நாட்கள் | C7 & C6 (வீதி நிர்மாணம் ) | 77 நாட்கள் | 59,000.00 | 10.01.2025 |
| NP/14/41(13)/4/Council/ PVIII/2024/37 | அன்னங்கை வீதி 10 வது குறுக்கு வீதி புனரமைப்பு , உரும்பிராய் மேற்கு | 3.81 | 60 நாட்கள் | C8& C 7 (வீதி நிர்மாணம் ) | 63நாட்கள் | 39,000.00 | 27.12.2024 |
| NP/14/41(13)/4/Council/ PVIII/2024/38 | மன்னகலட்டி வீதி மிகுதி வேலை , ஊரெழு | 2.94 | 60 நாட்கள் | C8 & C7 (வீதி நிர்மாணம் ) | 63 நாட்கள் | 30,000.00 | 27.12.2024 |
| NP/14/41(13)/4/Council/ / PVIII /2024/39 | ஞானவைரவர் வீதி 2 ம் குறுக்கு தெரு , உரும்பிராய் | 0.87 | 45 நாட்கள் | C9 & C8 ( வீதி நிர்மாணம்) | 49 நாட்கள் | 9,000.00 | 13.12.2024 |
| NP/14/41(13)/4/Council/ / PVIII /2024/40 | வளர்பிறை சனசமூக நிலைய குறுக்கு வீதி புனரமைப்பு , ஊரெழு | 1.03 | 45 நாட்கள் | C9& C8 ( வீதி நிர்மாணம் ) | 49 நாட்கள் | 11,000.00 | 13.12.2024 |
| NP/14/41(13)/4/Council/ Maintenance / PVIII /2024/41 | பொக்கணை இந்து மயான திருத்தம் , ஊரெழு | 0.75 | 45 நாட்கள் | C9& C8 (கட்டட நிர்மாணம் ) | 49 நாட்கள் | 7,500.00 | 13.12.2024 |
| NP/14/41(13)/4/Council/ Maintenance / PVIII /2024/42 | நொச்சிக்காடு இந்து மயானம் புனரமைப்பு , இருபாலை | 0.98 | 45 நாட்கள் | C9&C8 (கட்டட நிர்மாணம் ) | 49 நாட்கள் | 10,000.00 | 13.12.2024 |
| NP/14/41(13)/4/Council/ Maintenance// PVIII /2024/43 | செக்கடி இந்து மயானம் புனரமைப்பு , இருபாலை கிழக்கு | 1.01 | 45 நாட்கள் | C9& C8 (கட்டட நிர்மாணம் ) | 49 நாட்கள் | 11,000.00 | 13.12.2024 |

தலைவர்,
உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை
புத்தூர்.
2024.09.12

(CR/43205) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலமைப்பரிசில் பரீட்சை அனுமதி அட்டை வழங்கல்

யாழ்ப்பாணம், செப்.12
ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்டுள்ளன. இந்த அனுமதி அட்டைகளை மாணவர்களுக்கு சுப்நேரத்தில் வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று சில பாடசாலைகளில் இடம்பெற்றன. புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ச-17)

### பொன்விழாவையொட்டி
## நூலகங்கள் கருத்தாடல்

யாழ்ப்பாணம், செப். 12
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொன்விழா ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வித்தியானந்தன் நூலகத்தால் 'அறிவு வலுவூட்டல்: உயர்ச்சியின் உந்துசக்திகளாக நூலகங்கள்' எனும் தலைப்பிலான நூலக தகவல் விஞ்ஞானக் கருத்தரங்கு இன்று 12ஆம் திகதி மற்றும் 13ஆம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழகத்தின் நூலக கேட்போர்கூடத்தில் நடைபெறவுள்ளது.

துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் நடைபெறும் இந்தக் கருத்தரங்கானது வித்தியானந்தன் நூலகத்தால் நடத்தப்படுகின்ற 'ஏடகம்' அறிவுப்பகிர்வு மாநாட்டின் தொடர்ச்சியாகும்.

முதல் நாள் கருத்தரங்கில் முதன்மை உரையை சென்னையிலுள்ள ரோஜா முத்தையா ஆய்வு நூலகத்தின் பணிப்பாளர் கலாநிதி சுந்தர் கணேசன் 'தெற்காசியாவின் அறிவு வளங்களை ஆவணமாக்கல்' என்ற தலைப்பில் நிகழ்த்தவுள்ளதுடன், 20க்கும் மேற்பட்ட ஆய்வாளர்களின் நூலகம் மற்றும் ஆவணவாக்கம் சார் செயற்றிட்டங்கள் நான்கு இருக்கைகளில் சமர்ப்பிக்கப்படவுள்ளன. அத்துடன், உள்ளூர் புத்தக விற்பனையாளர்களின் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இரண்டாம் நாள் நிகழ்வாக நடைபெறவுள்ள 'சமூக மேம்பாட்டுக்கான நூலகங்கள்' என்ற மையக்கருவினை அடிப்படையாகக்கொண்ட பல்துறைசார் அறிஞர்களின் கருத்தாடல்கள் பேராதனைப் பல்கலைக்கழக நூலகர் கலாநிதி. ஆர்.மகேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதில் நூலகவியலாளர் என்.செல்வராஜா, திருமதி துஷாரி செனிவிரட்ன, கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நுலகர் என்.ரவிக்குமார், யாழ். பல்கலைக்கழக கல்வியியல் துறைப் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி வி.விஜயபாஸ்கர் ஆகியோர் தமது சிறப்புரைகளை வழங்கவுள்ளனர். (ச)

# குளங்களைப் பாதுகாப்பதற்கு அணைக்கட்டுகளை அமைக்குக

## முல்லைத்தீவு மக்கள் கோரிக்கை



**முல்லைத்தீவு, செப்.12**
**முல்லைத்தீவு மாவட்டத்தில் பல குளங்களின் அணைக்கட்டுகள் சேதமடைந்த நிலையில் காணப்படுவதால் மழைக்காலத்தில் குளங்களின் நீர் மட்டம் உயர்கின்றபோது அணைக் கட்டுக்கள் உடையக்கூடிய அபாயம் உள்ளதாக மக்கள் சுட்டிக்காட்டியுள் ளனர்.**

நீண்டகாலமாக குளங்களின் அணைக் கட்டுகள் புனரமைக்கப்படாமையால் மாரி காலங்களில் அவை பாதிப்படையாமல் இருப்பதற்காக விவசாயிகள் மண் மூடைகளை அடுக்கி வருகின்றனர்.
அணைக்கட்டுகள் சேதமடைந்தால் வெள்ள அபாயம், பயிர்ச்செய்கை பாதிப்பு போன்ற பிரச்சினைகள் ஏற்படும்.
குளங்களை புனரமைப்பதற்கான நிதியை நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் வழங்குவர் என சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் விவசாயிகளுக்கு தொடர்ச்சியாக உறுதிமொழிகள் வழங்கப்படுகின்ற போதிலும் தற்போது வரை நிதி கிடைக்காததன் காரணமாக புனரமைப்பு வேலைகள் கிடப்பிலேயே போடப்பட்டுள்ளன.
எனவே மழைகாலம் ஆரம்பிப்பதற்கு முன்பதாக அணைக்கட்டுகளை புனரமைப்பதற்கு உரிய நடவடிக்கைகளை நீர்ப்பாசனத்திணைக்களம் எடுக்கவேண்டும் என முல்லைத்தீவு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-25, 13)

# யாகி புயலால் வியட்நாமில் பலியெடுப்புகள் அதிகரிப்பு!

வியட்நாமைத் தாக்கிய 'யாகி' புயலால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 143ஆக அதிகரித்துள்ளதாக, மீட்புப் பணிகளை ஒருங்கிணைக்கும் குழு அறிவித்துள்ளது. அத்துடன், உட்கட்டமைப்புகளில் கடும் சேதங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
(ம)

# மரண அறிவித்தல்

தோற்றம்
29 . 07 . 1941



மறைவு
11 . 09 . 2024

## அப்பாக்குட்டி செல்வராசா

கல்வயல் சாவகச்சேரியை சேர்ந்த அப்பாக்குட்டி செல்வராசா அவர்கள் நேற்று (11.09.2024) புதன்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற புராணமேதை அப்பாக்குட்டி - சேதுப்பிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும் மீசாலை கிழக்கைச்சேர்ந்த காலஞ்சென்ற முதலித்தம்பி-சேதுப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், இரத்தினபூபதி அவர்களின் அன்புக் கணவரும், சுதாமதி, சுதாகரன் (வயலூரான் பிரதேசசெயலகம் தென்மாராட்சி), சுதர்சன் (செம்பியன் பற்று), செல்வமதி (நல்லூர்), செல்வரூபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், தயாநிதி, சிவாஜினி, ஜோகேஸ்வரி, நிமலன் (சுகாதார வைத்தியஅதிகாரி பணிமனை யாழ் மாநகரசபை), ஜனனி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார். லதாங்கினி (லண்டன்), சிவதர்சன், வரோதயன், சிவோதயன், சஜிந்தா, நிலாங்கினி, கலாபன், செங்கதிர், தமிழ்ச்செல்வி, தேனுகா, துவாரகா, சுபப்பிரியன், ரேனுப்பிரியா, பங்கயன், விதுசாயினி, கீர்த்தனா, கார்த்திகா ஆகியோரின் பேரனும் ஆவார். மேலும் டிவேஸ், ஜஷ்விகா, ஆகேஷ், கிஷானி, ஜஷ்வின், நயோமிகன், மோலிஷா ஆகியோரின் அன்பு பூட்டனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.09.2024) வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லதில் இடம்பெற்று நண்பகல் 12.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிபிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**
சுதாகரன் - 077 071 0729
சுதர்சன் - 070 345 9175
செல்வரூபன் - 077 194 1869

கல்வயல்
சாவகச்சேரி

(R 43207) V-1

# அகமிக மகிழ்ந்து வாழ்த்துகிறோம்

## உயர் திரு பத்மராசா பத்மநிருபா

(தாதிய உத்தியோகத்தர் யாழ் போதனா வைத்தியசாலை)




09.09.2024 அன்று
யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்ற
நீதிபதி, திரு அ.அ.ஆனந்தராஜா
அவர்கள் முன்னிலையில் "அகில
இலங்கை சமாதான நீதவானாக
சத்தியப்பிரமாணம் செய்து
கொண்ட எங்கள் பேரன்புமிக்க
பெருமதிப்புக்குரிய உயர்திரு
பத்மராசா பத்மநருபாவை
வாழ்த்துவதில் பேருவகை
அடைகிறோம்.
உம் பணியோடு
இறைபணியுமாற்றியே மக்கள்
சேவையே மகத்தானது
என்றெண்ணி அர்ப்பணிப்புடன்
ஆனந்தமாய் இன்முகத்தோடு
ஈதலும், உற்றவர்கள் ஊரவர்கள்
எல்லாரும் நின் ஏற்றந்தன்னை
ஐம்புலன்களும் ஒன்றாகி
கொண்டாட ஓங்காரரூபனாம்
வெல்வில் பதியான் வேலவனின்
திருவருள் கடாக்ஷம் கிடைப்பதாக
என்றென்றும் நல்லாசிகளுடன்

சிவப்பிரம்மஸ்ரீ சிவா நித்தியானந்த சிவாச்சாரியார் குடும்பம்
வெல்வில் ஸ்ரீ முருகமூர்த்தி தேவஸ்தானம்
சங்கானை

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
08 . 08 . 1935



இறப்பு
07 . 09 . 2019

அமரர்

## திலகவதி விஸ்வநாதன்

(வேலணை மேற்கு, சிற்பனை)

**திதி : 12.09.2024**

உங்கள் திருவுருவம் மறைந்து ஆண்டுகள் ஐந்து ஆனாலும்
ஆறாது எம் துயரம்
அம்மா உங்களுக்கு இணையாக ஒரு தெய்வம் இவ்வுலகில்
எங்கும் நாம் கண்டதில்லை.
எம் வாழ்வோடு கலந்திருந்து எம்மை வழிநடத்தி காத்திருந்த தாயே
எங்குதான் சென்றீர்களோ!
உங்கள் நினைவுகளை சுமந்தபடி உம் அளவற்ற அன்பிற்காய்
எம் மனம் அலைகிறது
தாயே மீண்டும் பிறப்பெடுத்து எம் இல்லமது வந்துவிடு அம்மா
நாம் மடியிட்டு தாலாட்டிட.
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சிற்பனை
வேலவனின் பாதங்களை வேண்டி நிற்கின்றோம்.

இல 10, இந்து மகளிர் ஒழுங்கை,
தெல்லிப்பளை, யாழ்ப்பாணம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(CS/56177) I-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் இனவாதப்போருக்கு வித்திட்டவரே ரணில்தான்

## தேசிய மக்கள் சக்தி பதிலடி



**கொழும்பு, செப். 12**

**அன்று யாழ். நூலகத்துக்கு தீமூட்டி வாக்குகளை கொள்ளையடித்ததால்தான் போருக்கு வழிசமைக்கப்பட்டது. நாட்டை தீக்கிரையாக்குகின்ற இனவாதத்துக்கு வழிசமைத்தது 1981ஆம் ஆண்டில் இடம்பெற்ற இந்த நாசகார செயலாகும். அவ்வாறு நடந்து கொண்டவர்கள் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட ஆட்சியாளர்கள் - இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் தெரிவித்தார்.**

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது-

தோழர் அநுர வடக்குக்குச் சென்று மக்களிடம் மிகவும் தெளிவாக முழு நாடுமே ஒன்றுசேர்ந்து நாட்டைக் கட்டியெழுப்புகின்ற கொள்கையை வெற்றியீட்டச் செய்விக்க ஒன்று சேருமாறே கேட்டுக்கொண்டார்.

தெற்கில் உள்ள மக்கள் வெற்றிக்காக அணிதிரண்டுள்ள நேரத்தில் அந்த வாய்ப்பை வடக்கிலுள்ள மக்கள் கைவிடவேண்டாம் என்றே அவர் வலியுறுத்தினார். எனினும் ரணில் வேண்டுமென்றே அதனை திரிபுபடுத்தி இனவாதக் கூற்றொன்றை வெளியிட்டுள்ளார்.

எனவே மீண்டும் இனவாதத்தை தூண்டுவதற்கான கூற்றுகளை மேற்கொள்ளல் சம்பந்தமாக ரணில் விக்கிரமசிங்க மன்னிப்புக்கோர வேண்டும். நெறிமுறை சார்ந்த அரசியல் நடைமுறை இருக்குமாயின் அதனை நீங்கள் நாட்டுக்கு வெளிப்படுத்திக்காட்ட வேண்டும் - என்றார். (அ-ஒ-இ)

# தமிழ்ப் பொதுவேட்பாளர் சிங்களவருக்கு எதிரானவரல்லர்

யாழ்ப்பாணம், செப். 12

தமிழ்ப் பொதுவேட்பாளர் நிறுத்தப்பட்டமை சிங்கள மக்களுக்கு எதிரானது அல்ல. மாறாக இந்த நாட்டின் தேசிய இனங்களில் ஒன்றான தமிழ் மக்கள் வரலாற்று ரீதியில் எதிர்கொண்டுவரும் பிரச்சினைகள் இன்றும் தீர்க்கப்படவில்லை என்பதை எடுத்துக்காட்டுவதற்கானது என தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைமைக்குழு உறுப்பினரும் முன்னாள் வலிகாமம் கிழக்குப் பிரதேசசபைத் தவிசாளருமான தியாகராஜா நிரோஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டில் ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் எந்தளவு தூரம் ஆட்சியில் அமரக்கூடிய ஒருவருக்கு ஆதரவு அளிக்கலாம் என்று சிலர் அல்லும் பகலும் அறைபோட்டு சிந்திக்கின்றனர். செயற்படுகின்றனர். அவர்கள் இந்த நாட்டில் வெல்லக்கூடிய ஒருவரை தேடிப்பிடித்து சலுகைகளைப் பெற்று; பெற்று சகித்து வாழுவோம் என்ற மனநிலையில் இனத்தினை அடமானம் வைக்கின்றனர்.

நாட்டில் சிங்கள மக்கள் பெரும்பான்மையான எண்ணிக்கையில் வாழ்கின்றனர் என்பதற்காக எண்ணிக்கையில் குறைந்த அளவுடைய நாட்டின் தேசிய இனமான தமிழினம் இன உரிமைகளை விற்று வாழ முடியாது. சிங்களப் பேரினவாதிகளுக்கு நோகக்கூடாது என்று வாழ்பவர்கள் எம்மிடத்தில் அதிகரித்து விட்டனர்.

தமிழ் மக்களைப் பொறுத்தளவில் எமது அரசியல் அபிலாஷைகளை தொடர்ந்தும் வெளிப்படுத்த வேண்டிய அவசியம் இன்றும் உள்ள நிலையில் ஒருமித்து தமிழ்ப் பொதுவேட்பாளரின் சின்னமான சங்கு சின்னத்துக்கு வாக்களித்து தமிழ்த் தேசியக் கடமையை நிறைவேற்றுவோம் - என்றார். (ஒ-இ)



# வட்டுக்கோட்டையில் பாரதி வீதி திறப்பு

யாழ்ப்பாணம், செப். 12

வட்டுக்கோட்டையில் பாரதி வீதி நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. வட்டு. தென்மேற்கிலுள்ள வீதிக்கு பாரதி வீதி என பெயர் சூட்டப்பட்டு அந்த வீதி திறந்து வைக்கப்பட்டது.

விருந்தினர்கள் மங்கல இசை வாத்தியங்கள் முழங்க அழைத்து வரப்பட்டு, மங்கல விளக்கேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. அதனைத்தொடர்ந்து விருந்தினர்களது உரைகள், வீதி திறந்து வைப்பு வைபவம் என்பன இடம்பெற்றன.

யாழ். நண்பர்கள் அமைப்பின் தலைவர் கலாநிதி சிதம்பரமோகன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மறவன்புலவு சச்சிதானந்தம் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்ததுடன், மத குருமார், வலி.மேற்கு பிரதேச செயலர் திருமதி கவிதா உதயகுமார், வலி.மேற்கு பிரதேசசபை செயலாளர் சண்முகராஜா பாலரூபன் என பலரும் பங்கேற்றனர். (ஒ-27,20)

# புலம்பெயர் தொழிலாளர்களால் 577 மில்லியன் டொலர்

கொழும்பு, செப். 12

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்றதிலிருந்து புலம்பெயர்ந்த தொழிலாளர்களால் 12.4 பில்லியன் அமெரிக்க டொலர்கள் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கடந்த ஓகஸ்ட் மாதம் 577.5 மில்லியன் டொலரை புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் வங்கி முறை மூலம் இலங்கைக்கு சட்டபூர்வமாக அனுப்பியுள்ளனர்.

2023ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்துடன் ஒப்பிடுகையில் இவ்வருடம் ஓகஸ்ட் மாதத்தில் நாட்டுக்கு அனுப்பப்பட்டுள்ள பணம் 11 வீதத்தால் அதிகரித்துள்ளது. (ஒ-இ)

# சந்நிதி ஆலயத் திருவிழாவில் தவறவிடப்பட்ட நகைகளை பெற்றுக்கொள்ளலாம்

யாழ்ப்பாணம், செப். 12

செல்வச்சந்நிதி ஆலய மஹோற்சவ காலத்தில் தவறவிடப்பட்ட ஒரு தொகுதி நகைகள் கண்டெடுக்கப்பட்டு பருத்தித்துறை பிரதேச செயலக உற்சவ காலப் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார். (ச)

# கசிப்புடன் ஒருவர் பேருந்தில் கைது

கிளிநொச்சி, செப். 12

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தருமபுரம் பகுதியில் பேருந்தில் கசிப்பைக் கொண்டு செல்ல முற்பட்ட சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தருமபுரம் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரிடமிருந்து 28 லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி. எம். சதுரங்க தெரிவித்துள்ளார். (ச-113)

# சிரமதானப்பணி

யாழ்ப்பாணம், செப்.12

யாழ். சிறைச்சாலையின் 103ஆவது அணியின் 3ஆவது ஆண்டு நிறைவையொட்டி யாழ். கடற்கரை சூழலானது கடந்த திங்கட்கிழமை சிரமதானம் செய்யப்பட்டது.

சிறைச்சாலை அத்தியட்சகர் சீ.இந்திரகுமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (ச-45-27)




## சேவை நலன் பாராட்டு




யாழ் போதனா வைத்தியசாலையில் 35 வருடங்களாக பொறுப்புத் தாதிய உத்தியோகத்தராக கடமையாற்றி 01.09.2024 அன்று ஓய்வு பெற்றுச் சென்ற திருமதி திருவருட் செல்வி இளங்கோ அவர்களது சேவையை பாராட்டுவதோடு ஓய்வுகாலத்தில் சீரும் சிறப்புமாக பல்லாண்டுகாலம் வாழ இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**தாதியர் நலன்புரி சங்கம்,**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தல்...

பெற்றுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
அதன்படி, தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு ஆயிரத்து 199 முறைப்பாடுகளும், மாவட்டத் தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 2 ஆயிரத்து 106 முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன. அத்துடன் தேர்தல் வன்முறைகளும் பதிவாகியுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

## ரணிலுக்கான...

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே ராஜித இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவுகோரி கடந்த 7ஆம் திகதி முதல் வீடுவீடாகச் செல்ல ஆரம்பித்தோம். இந்த வேலைத்திட்டத்தில் ரணில் நிகழ்நிலை ஊடாகத் தொடர்புகொண்டுவருகிறார். அதன்போதுதான் ஜனாதிபதிக்கு மக்களின் ஆதரவு எந்தளவு இருக்கிறது என்பதை எம்மால் உணர்ந்துகொள்ள முடியுமாகியது.
தேர்தலில் யாருக்கு வாக்களிப்பது என எந்த முடிவும் எடுக்காமல் மௌனமாக இருந்தவர்களே தற்போது ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க முன்வருகிறார்கள்.
ஜே.வி.பி. தற்போது தேசிய மக்கள் சக்தி என்ற பேரில் வந்தாலும் அவர்களின் உண்மையான கொள்கையே தற்போது வெளிப்பட்டு வருகிறது. அதேநேரம் இவர்கள் வீடுகளுக்குச் சென்று அங்குள்ள வாக்காளர்களின் எண்ணிக்கையைப் பதிவு செய்துகொண்டு, அதன் பின்னர் அந்த எண்ணிக்கையைக் கணிப்பீடாக அறிவிக்கின்றனர்.
1982 ஆம் ஆண்டு ரோஹண விஜயவீர ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட்டபோதும் இவ்வாறு வீடு வீடாகச் சென்று, அங்குள்ள வாக்காளர்களின் எண்ணிக்கையை
குறிப்பிட்டுக்கொண்டு, தேர்தலில் 14 இலட்சம் வாக்குகளைப் பெறுவதாக அறிவிப்பு செய்து வந்தார்கள். ரோஹண விஜயவீர தேர்தல் பிரசாரக் கூட்டங்களுக்கும் இன்றுபோல் அதிகமான மக்கள் கூடுவார்கள். ஆனால் இறுதியில் வாக்கு எண்ணும்போது ரோஹண விஜயவீரவுக்கு இரண்டு இலட்சத்து 70ஆயிரம் வாக்குகளே செலுத்தப்பட்டிருந்தன. இதன் பின்னரும் இந்த வழியில் சென்றால் ஒருபோதும் வெற்றிபெற முடியாது என்று உணர்ந்த ரோஹண விஜயவீர, அதன் பின்னரே வன்முறையைக் கையில் எடுக்க ஆரம்பித்து, 88 காலப் பகுதியில் அது தீவிரமடைந்தது.
அதேநேரம் மக்கள் விடுதலை முன்னணியின் தேர்தல் பிரசாரங்களுக்கு அதிகமான மக்கள் ஒன்றுகூடுவது வழமை. ஆரம்பகாலத்தில் இருந்து அது இடம்பெறுகிறது. ஏனெனில் அந்தக் கட்சி ஆதரவாளர்களிடம் இருக்கும் ஒரு பண்புதான், மக்கள் விடுதலை முன்னணியின் கூட்டம் எங்கு இடம்பெற்றாலும் அந்தக் கூட்டத்துக்கு அவர்கள் செல்வார்கள். இந்தப் பண்பு வேறு எந்தக் கட்சியிலும் காணமுடியாது. அதனால் மக்கள் விடுதலை முன்னணியின் கூட்டங்களில் மக்கள் அதிகமாகக் கூடுவது தொடர்பில் பெரிதளவில் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை.
அத்துடன் ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெறாவிட்டால், அனைத்து வேலைத் திட்டங்களும் பாதிக்கப்பட்டு, நாடு மீண்டும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளும் என்ற அச்சம் மக்களிடம் ஏற்பட்டுள்ளது. அதேநேரம் உலகில் வங்குரோத்து அடைந்த ஒரு நாடு இரண்டு வருடங்களில் இயல்பு நிலைக்கு வந்தது என்றால் அது இலங்கை மாத்திரமாகும்" - என்றார். (அ-ம)

## ரணிலின்...

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
கீதா குமாரசிங்க மேலும் தெரிவித்ததாவது:-
"சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிப்பதற்கு நான் எடுத்த தீர்மானம் எனது சுய உரிமையாகும். எனது 14 வருட அரசியல் வாழ்வில் கட்சி தாவும் அரசியல் மற்றும் அடிமைத்தனமான அரசியலை நான் வெறுக்கின்றேன். அரசாங்கத்திடமிருந்து எவ்விதச் சிறப்புரிமைகளையும் நான் பெற்றுக் கொண்டதில்லை. எனவே எனக்கு அரசாங்கத்துக்குப் பயமில்லை. ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் தவறான தீர்மானத்தை எடுத்தால் நாடு பெரும் அழிவை எதிர்கொள்ளும். எனவே மக்கள் பிரதிநிதி என்ற ரீதியில் அவர்களுக்கு யதார்த்தத்தை உணர்த்தவேண்டியது எனது கடமையாகும்.
ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்காக நான் வாக்களித்திருக்கின்றேன். ஆனால் அவர் என்னை இராஜாங்க அமைச்சர் பதவியிலிருந்து நீக்கியிருக்கின்றார். பதவிக்காக ரணிலுக்குத் தேவையான தீர்மானத்தை என்னால் எடுக்க முடியாது. அதற்கான அவசியமும் இல்லை. சஜித் வெற்றி பெறுவார் என்பதால் தானே நீங்கள் அங்கு சென்றீர்கள் என்று என்னிடம் கேட்கின்றனர். அதுவே உண்மையாகும்.
கவிழப்போகும் கப்பலில் ஏறித் தற்கொலை செய்துகொள்ள நான் விரும்பவில்லை. சரியான பாதையில் பயணிப்பதற்காக எந்தவொரு தியாகத்துக்கும் நான் தயாராகவே இருக்கின்றேன். எனவே இராஜாங்க அமைச்சுப் பதவி பறிபோனதில் கவலை இல்லை.
அரசியலுக்காகவே நான் சுவிட்ஸர்லாந்து குடியுரிமையையும் இழந்தேன். அதனால் எனக்கு பெரும் பொருளாதார இழப்பு ஏற்பட்டது. எனினும் அதனை விட நான் மக்களுக்குச் சேவையாற்றுவதற்கே முன்னுரிமையளித்தேன்" - என்றார். (அ-ம)

## போர்க்...

மன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
"போர் முடிவடைந்து 15 வருடங்களுக்கு பிறகு ஏன் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை அமைப்பதற்கான சட்டவரைவு கொண்டுவரப்படுகின்றது? ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் மங்கள சமரவீர வெளிவிவகார அமைச்சராக இருந்தபோது இணை அனுசரணை வழங்கப்பட்ட தீர்மானத்துக்கமைய இதுவரை ஏழு சட்டவரைவுகள் கொண்டுவரப்பட்டுள்ளன.
காணாமற்போனோர் அலுவலகம், இழப்பீட்டு பணியகம் என அந்த பட்டியல் நீள்கின்றது. மேற்படி ஏழு சட்டங்களையும் செயற்படுத்தும் நோக்கிலேயே உண்மைமற்றும்நல்லிணக்கஆணைக்குழு சட்டமூலம் முன்வைக்கப்பட்டுள்ளது. 57 பேரின் பட்டியலை ஜஸ்மின் சூக்கா தயாரித்துவிட்டார். அதில் 47 படையினரும் உள்ளனர். அந்தப் பட்டியலை காட்டி அச்சுறுத்தியதால்தான் கோத்தாபய ராஜபக்சவை விரட்டுவதற்கு இவர்கள் ஒத்துழைப்பு வழங்கினர்.
உண்மைமற்றும்நல்லிணக்கஆணைக்குழு சட்டம் நடைமுறைக்கு வந்தால் படையினர் தண்டிக்கப்படுவார்கள். இச்சட்டவரைவுக்கு மஹிந்த தரப்பும் முதலாம் வாசிப்பின்போது ஆதரவு வழங்கியுள்ளது. இராணுவம் நாட்டை மீட்டதால்தான் சுதந்திரமாக வாழ்கின்றோம். எனவே, படையினரைப் பலிக்கடாவாக்க இடமளிக்கமாட்டோம். நூறு வருடங்கள் சென்றாலும் இது பற்றிப் பேசுவோம்" - என்றார். (அ-ஒ-44)

## பொருளாதாரக்...

சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர், அநுரகுமார திஸாநாயக்க, நான், சஜித் ஆகியோர் பங்கேற்கும் காணொலி விவாதத்துக்கு நேரத்தை ஒதுக்கத் தயார் என்றும் ரணில் இதன்போது தெரிவித்துள்ளார்.
குருநாகலில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பரப்புரையில் உரையாற்றும்போதே ரணில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
"9 ஆயிரம் பில்லியன் ரூபா செலவும், 4 ஆயிரத்து 900 பில்லியன் ரூபா வருமானமும், 4 ஆயிரம் பில்லியன் ரூபா பற்றாக்குறையும் கொண்ட, நாட்டின் பொருளாதாரத்தை அழிக்கும் கொள்கைப் பிரகடனத்தை அநுரகுமார திஸாநாயக்க ஏன் தனது விஞ்ஞாபனத்தில் வெளியிட்டுள்ளார்? மேடைகளில் பொய்யாகக் கூச்சல் எழுப்பாமல் தமது சரியான பொருளாதாரக் கொள்கையை அநுர நாட்டுக்கு முன்வைக்கவேண்டும்.
இரண்டு வருடங்களுக்கு முன்பு எனக்கு என்ன நடந்தது என இங்கு கேள்வி எழுப்பப்பட்டது. சஜித்துக்கும் அநுரவுக்கும் என்ன நடந்தது என்று நான் கேட்டிருக்கவேண்டும். உணவு, மருந்து, எரிபொருள், எரிவாயு, உரம் இன்றி மக்கள் தவிக்கும்போது சஜித்துக்கும் அநுரவுக்கும் மக்களுக்காக வருத்தமும் வேதனையும் ஏற்படவில்லையா? மக்களுக்கு ஏதாவது செய்யவேண்டும் என்று நினைக்கவில்லையா? அவர்கள் அப்படிச் செய்திருந்தால் இன்று நான் இங்கு இருந்திருக்க மாட்டேன். அவர்கள் தமது பொறுப்புகளைச் சரியாக நிறைவேற்றாத காரணத்தினால்தான், ஒரேயொரு நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து நாட்டின் ஜனாதிபதிப் பொறுப்பை ஏற்க நேர்ந்தது.
நாட்டின் பொறுப்பை ஏற்று சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவுடன் நாட்டின் பொருளாதாரத்தை முன்னோக்கிக் கொண்டு வந்தோம். அடுத்த ஆண்டு, மக்களின் வாழ்க்கைச் சுமையைக் குறைப்பதற்கான முயற்சிகளை எடுப்போம். நாடு முழுவதும் முதலீட்டு வலயங்களை உருவாக்குவதோடு, விவசாயத்தை நவீனமயமாக்கும் திட்டத்தை செயற்படுத்த ஆரம்பித்திருக்கிறோம். இளையோருக்கான தொழில் வாய்ப்புகளும் உருவாக்கப்பட்டுள்ளன.
சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தங்களின்படி நாம் செயற்பட்டால், கடன் பெறுவதற்கான தேவைகள் குறைவாகவே இருக்கும். அரசாங்கத்தின் வரவு - செலவுத் திட்டத்தின்படி எதிர்காலத்தில் இந்நாட்டின் செலவு 6 ஆயிரத்து 800 பில்லியன் ரூபாவாகவும், வருமானம் 5 ஆயிரத்து 100 பில்லியன் ரூபாவாகவும் காணப்படுவதோடு, இடைவெளி ஆயிரத்து 700 பில்லியன் ரூபாவாகக் காணப்படும். இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5.2 சதவீதமாகும். எனவே, இந்த இடைவெளியை நிரப்பும் இயலுமையும் எமக்கு உள்ளது.
ஆனால் ஜே.வி.பி. தருவதாகக் கூறும் நிவாரணங்களை வழங்கினால் செலவு 8 ஆயிரத்து 900 கோடி ரூபாவாகவும், வருமானம் 4 ஆயிரத்து 900 பில்லியன் ரூபாவாகவும் காணப்படும். அத்தோடு வரிக் குறைப்புத் தொடர்பிலும் பேசுகின்றனர். அதன்படி வரவு - செலவுத் திட்ட இடைவெளி 4 ஆயிரம் பில்லியன் ரூபாவாக அமையும். பின்னர் பட்ஜெட் இடைவெளி மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 11.9 சதவீதமாகக் காணப்படும். இவ்வாறான பொருளாதாரத்தை முன்னோக்கிக் கொண்டுச் செல்ல முடியுமா என்பது கேள்விக்குறியாகும்" - என்றார். (அ-ம)

## படையினரைத்...

"போர் முடிவடைந்து 15 வருடங்கள் கடந்துவிட்டன. போர் முடிவடைந்து இரு வாரங்களில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு யோசனையை நாம் முன்வைத்தோம்.
உண்மைமற்றும்நல்லிணக்கஆணைக்குழு என்பது உயிரிழந்த புலிகள் அமைப்பினர் குடும்பத்தாருக்கு மட்டுமானது அல்ல. புலிகளால் கொல்லப்பட்ட தமிழ்க் குடும்பங்கள் மற்றும் இராணுவத் தரப்பில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் என அனைத்துத் தரப்பினரும் தமது மனக்கவலைகளை இதில் வெளியிடலாம். அவர்களுக்கெனச் சொல்வதற்கு ஒரு கதை இருக்கும். அவ்வாறு சொல்வதன்மூலம் உளரீதியிலான ஆறுதல் கிட்டும்.
தென்னாபிரிக்காவிலும் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு நிறுவப்பட்டது. அங்கும் கதைகள் சொல்லப்பட்டன. ஆனால் அனைவருக்கும் தண்டனை வழங்குமாறு கோரப்படவில்லை. இப்படியான ஆணைக்குழுக்கள் அவசியம். அது உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனவே, படையினரைப் பலிகடாவாக்குவதற்கான நடவடிக்கை என்றெல்லாம் குறுகிய நோக்கில் பிரசாரம் முன்னெடுக்கக்கூடாது" - என்றார். (அ-ஒ-44)

## தபால்...

இம்முறை அரச சேவையாளர்களில் 7 இலட்சத்து 12 ஆயிரத்து 321 பேர் தபால்மூல வாக்களிப்புக்குத் தகுதி பெற்றிருந்தனர். வாக்குப் பதிவுகள் செப்ரெம்பர் மாதம் 4 ஆம், 5 ஆம் மற்றும் 6 ஆம் திகதிகளில் இடம்பெற்றன. இந்த மூன்று நாள்களிலும் வாக்களிக்க முடியாதவர்களுக்கு நேற்றும் இன்றும் மேலதிக நாள்களாக வழங்கப்பட்டன. இவ்வாறான நிலையிலேயே, இதைவிட மேலதிக அவகாசங்கள் வழங்கப்படாது என்று தேர்தல்கள் ஆணைக்குழு திட்டவட்டமாக அறிவித்துள்ளது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிளாஸ்ரிக் கழிவு உற்பத்தி முதலிடத்தில் இந்தியா!

இந்தியா, செப்.12
பூமியை மாசுபடுத்தும் பிளாஸ்ரிக் கழிவுகளை உற்பத்தி செய்வதில் இந்தியா முதலிடத்தில் உள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.
உலக நாடுகள் அனைத்திலும் பிளாஸ்ரிக் கழிவுகளை குறைப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
இந்தநிலையில் இந்தியாவில் ஒவ்வொரு வருடமும் 93 இலட்சம் தொன் பிளாஸ்ரிக் கழிவுகள் கொட்டப்படுகின்றன என நேச்சர் ஜெர்னல் நடத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளது. உலகளாவிய ரீதியில் ஐந்தில் ஒரு பங்கு பிளாஸ்ரிக் கழிவுகள் இந்தியாவில் தான் உருவாகின்றன.
இந்தியாவுக்கு அடுத்ததாக நைஜீரியாவில் 35 இலட்சம் தொன் பிளாஸ்ரிக் கழிவுகளும் இந்தோனேஷியாவில் 34 இலட்சம் தொன் பிளாஸ்ரிக் கழிவுகளும் கொட்டப்படுகின்றன. இந்த வரிசையில் நான்காவது இடத்தை சீனா பிடித்துள்ளது. (எ-இ)

## இந்தியா வரவுள்ளார் உக்ரைன் ஜனாதிபதி

கீவ், செப்.12
உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஷெலன்ஸ்கி, இந்தியா வரவுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.
கடந்த மாதம் ரஷ்யா உக்ரைன் நாடுகளுக்கு பிரதமர் மோடி அரசு முறைப்பயணம் மேற்கொண்டார். உக்ரைன் சென்ற பிரதமர் மோடி அந்நாட்டு ஜனாதிபதி வோலோடிமிர் ஷெலன்ஸ்கியை சந்தித்துப் பேசினார்.
போர் விவகாரத்தில் இந்தியா நடுநிலை வகிக்கவில்லை. வெறும் பார்வையாளராக ஒதுங்கிக் கொள்ளவும் இல்லை. அமைதியின் பக்கமே இந்தியா உள்ளது என்று இந்தப் பயணத்தில் மோடி சுட்டிக்காட்டியிருந்தார்.
அப்போது பரஸ்பரம் நட்புறவு மேம்பட இந்தியா வருமாறு ஜனாதிபதி வோலோடிமிர் ஷெலன்ஸ்கிக்கு அழைப்பு விடுத்திருந்தார். அதையடுத்து இந்தாண்டு இறுதியில் அரசு முறைப் பயணமாக உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஷெலன்ஸ்கி இந்தியா வர வாய்ப்புள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## எல்லைக் கட்டுப்பாடுகளை இறுக்கமாக்கும் ஜேர்மனி

பேர்லின், செப்.12
எல்லைக் கட்டுப்பாடுகளை ஜேர்மனி விரிவுபடுத்தியுள்ளது. புதிய கட்டுப்பாடுகள் எதிர்வரும் 16ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
கடந்த மாதம் சோலிங்கன் நகரில் மூன்றுபேர் கத்திக்குத்துத் தாக்குதலில் உயிரிழந்தனர். தாக்குதலை சிரிய நாட்டைச் சேர்ந்த ஒருவரே மேற்கொண்டிருந்தார். அவரது புகலிடக் கோரிக்கை மறுக்கப்பட்டிருந்தநிலையில், நாடு கடத்தப்படவிருந்தார்.
ஆயினும் இந்தத் தாக்குதலுக்கு இஸ்லாமிய அரசு அமைப்பு உரிமைகோரியிருந்தது.
இந்தத் தாக்குதலின் பின்னணியில் ஜேர்மனிய அரசு எல்லைக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைக் கடுமையாக்கியுள்ளது. சோதனை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்படும் என்று அறிவித்துள்ளது. (எ-)

## சமூக வலைத்தளங்களை பயன்படுத்துவதற்குத் தடை

மெல்போர்ன், செப்.12
அவுஸ்திரேலிய அரசாங்கம் சமூக வலைத்தளப் பயன்பாட்டில் புதிய கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.
16 வயதுக்குட்பட்டவர்கள் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவதற்குத் தடை விதிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அந்த நாட்டுப் பிரதமர் அந்தோனி அல்பானிஸ் தெரிவித்துள்ளார்.
குழந்தைகளைத் தொலைபேசி உள்ளிட்ட சாதனங்களில் இருந்து விலக்கி, விளையாட்டு மைதானங்கள், நீச்சல் குளங்கள் என்பவற்றில் பார்க்க விரும்புகின்றேன் என்று அவர் தெரிவித்துள்ளார்.



சில சமூக ஊடகங்கள் தீங்கு விளைவிப்பனவாக இருக்கின்றன. சமூக ஊடகங்களில் உள்ள தகவல்கள் குழந்தைகளின் மன ஆரோக்கியத்தில் தாக்கங்களை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-இ)

## சி.சி.ரி.வி. கமராவுடன் உலாவரும் பெண்!

கொழும்பு, செப்.12
இளம்பெண்ணின் தந்தை ஒருவர், தனது மகளின் பாதுகாப்புக்காக சி.சி.ரி.வி. கமராவை மகளின் தலையில் பொருத்தியுள்ளமை பெரும் பேசுபொருளாக மறியுள்ளது. பாகிஸ்தானிலேயே இளம் பெண் ஒருவர் தனது தலையில், சி.சி.ரி.வி. கமராவுடன் உலா வரும் காட்சிகள் அனைவரையும் வியக்க வைத்துள்ளது.
தனக்கு எந்த விதத்திலும் ஆபத்து நெருங்கி விடக் கூடாது என்பதற்காகவே தனது தந்தை இந்த செயலில் இறங்கியுள்ளார் என்று அந்த இளம் பெண் கூறியுள்ளார்.
அந்தப் பெண்ணின் தலையில் 360 டிகிரி கோணத்தில் படம் பிடிக்கும் சி.சி.ரி.வி. பொருத்தப்பட்டுள்ளது. அவரும், எந்தவொரு சலனமுமின்றி சி.சி.ரி.வி. மாட்டிய தலையுடனேயே உலா வருகிறார். தனது தந்தை எது செய்தாலும் அதை முழு மனதுடன் ஏற்பேன் என்றும் அந்த இளம்பெண் கூறியுள்ளார். (எ-இ)

## செனகல் படகு விபத்தில் உயிரிழப்புகள் அதிகரிப்பு

நியூயோர்க், செப்.12
செனகல் கடற்பரப்பில் ஏற்பட்ட படகு விபத்தில் பலர் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.
மேற்கு ஆபிரிக்காவை அண்மித்த கடற்பரப்பில் இந்த விபத்து நடந்துள்ளது. கடந்த ஞாயிற்றுக்கிழமை படகு கடலில் மூழ்கியிருந்தநிலையில் 9 பேரின் சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்டிருந்தன. தற்போது மேலும் 17 பேரின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று செனகல் கடற்படை தெரிவித்துள்ளது.
புலம்பெயர்வோர் பயணித்த படகே விபத்துக்குள்ளாகியுள்ளது. தேடுதல் நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன என்று செனகல் கடற்படை தெரிவித்துள்ளது. (எ-இ)

## பாகிஸ்தானில் நேற்று நிலநடுக்கம்!

பாகிஸ்தானின் தலைநகர் இஸ்லாமாபாத் உட்பட நாட்டின் பல பகுதிகளில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டது. இதன் தாக்கம் 5.7 ரிக்டர் அளவாகப் பதிவானது என்று பாகிஸ்தான் புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்தியாவிலும் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது. (ம)

## மெச்சிக்கோ நாடாளுமன்றுக்குள் நுழைந்த போராட்டக்காரர்கள்!

நியூயோர்க், செப்.12
மெச்சிக்கோவில் நீதித்துறை சீர்திருத்தம் தொடர்பாக நாடாளுமன்றம் ஆராய்ந்து கொண்டிருந்தவேளை ஆர்ப்பாட்டக்காரர்கள் உள்ளே நுழைந்ததால் பதற்றம் ஏற்பட்டது. அதையடுத்து நாடாளுமன்ற அமர்வுகள் ஒத்தி வைக்கப்பட்டன.
மெச்சிக்கோவின் பதவி விலகும் ஜனாதிபதியின் நீதித்துறை சீர்திருத்த முயற்சிகளுக்கு மாணவர்களும், நீதித்துறை ஊழியர்களும் கடும் எதிர்ப்பை வெளியிட்டு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.



நீதிபதிகளைத் தேர்ந்தெடுக்கும் முறையை அறிமுகப்படுத்தவுள்ள இந்த சீர்திருத்தத்திட்டத்தால் நீதித்துறையின் சுதந்திரத்துக்குப் பெரும் ஆபத்து ஏற்படும் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது. நீதித்துறை சீர்திருத்த சட்ட வரைவை நிறைவேற்றுவதற்கு ஆளும் கட்சியான மொரேனாவுக்கு தேவையான வாக்குகள் கிடைத்திருந்த நிலையிலேயே ஆர்ப்பாட்டக்காரர்கள் நாடாளுமன்றத்துக்குள் நுழைந்தனர். நாடாளுமன்ற அமர்வுகள் நடைபெறும் பகுதிக்குள் நுழைந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷங்களை எழுப்பினர். எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் அவர்களுடன் இணைந்துகொண்டனர்.
அதனால் அங்கு பதற்ற நிலைமை ஏற்பட்டு நாடாளுமன்ற அமர்வு ஒத்திவைக்கப்பட்டது. (எ-இ)

வேலைக்கு ஆள் தேவை
புடைவை வியாபார நிலையம் ஒன்றிற்கு பெண் பிள்ளைகள் வேலைக்குத் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு:
077 580 4770

வீடு வாடகைக்கு உண்டு
சுத்தபோசனமுள்ளவர்களுக்கு மட்டும் கந்தர்மடத்தில் வீடு வாடகைக்கு உண்டு.
077 442 4227, 077 983 2244
(CS/56171)-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.09.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org